A. Vennila - Kumbakonam - Thanjavur

Reg.No. | | | | | | |

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு – 2020

**காலம்:3.00மணி** **வகுப்பு – 12** **மதிப்பெண்கள்: 90**

## பொதுத்தமிழ்

### பகுதி – I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. குறியீட்டுடன் விடை தருக.** **14 x 1 = 14**

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்?
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொருத்தி விடை தேர்க.
   அ) அவன் அவள் அவர் – 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை
   ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் – 2) உளப்பாட்டுத் தன்மைப் பன்மை
   இ) நாம் முயற்சி செய்வோம் – 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்
   4) நாங்கள், நாம் – 4) பதிலிடு பெயர்கள்
   அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2
3. உவா உற வந்து கூடும்
   உடுபதி, இரவி ஒத்தார் – யார் யார்?
   அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன் இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி
4. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்?
   அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லிபக்கோடனும் குமணனும்
   இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்
5. போற்றித் திருஅகவல் என்னும் நூலை இயற்றியவர் யார்?
   அ) கம்பர் ஆ) எச்.ஏ. கிருட்டிணனார் இ) இறையன்பு
6. சிவந்து – இலக்கணக்குறிப்பு தருக.
   அ) பெயரெச்சம் ஆ) உருவகம் இ) வினையெச்சம் ஈ) உம்மைத்தொகை
7. குழிமாற்று எந்தத் துறையோடு தொடர்புடைய சொல்?
   அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வேளாண்மை
8. வேறுபட்டதைக் குறிப்பிடுக.
   அ) அண்மைக் காட்சித் துணிப்பு ஆ) சேய்மைக் காட்சித் துணிப்பு
   இ) நடுக்காட்சித் துணிப்பு ஈ) காட்சி மறைவு
9. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது?
   அ) கடந்தகாலத் துயரங்கள் ஆ) ஆட்களற்ற பொருளை இ) பச்சையம் இழந்த நிலத்தை
   ஈ) அனைத்தையும்
10. விளியறி ஞமலி – இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
    அ) எருது ஆ) குதிரை இ) நாய் ஈ) யாழி
11. காலை இளம்வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளி வரும் புதுவெயில் இக்கவிதையில் ......... பயின்று வந்துள்ளது.
    அ) பயன் படிமம் ஆ) வினைப்படிமம் இ) மெய்ப்படிமம் ஈ) உருப்படிமம்
12. அரசன் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்பதற்கு வள்ளுவர் கூறும் அதிகாரம்?
    அ) தெரிந்து தெளிதல் ஆ) செங்கோன்மை இ) வினைசெயல் வகை ஈ) மடியின்மை
13. மெய்ப்படிமம் என்பது ...... படிமம் எனவும் குறிப்பிடப்படும்?
    அ) பயன் ஆ) வினை இ) நிறம் ஈ) வடிவ
14. சிலப்பதிகாரம் ........... செய்யுள் வகையால் அமைந்தது?
    அ) முத்தகம் ஆ) இலகம் இ) தொடர்நிலை ஈ) தொகை நிலை

## பகுதி – II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடைதருக.** **3 x 2 = 6**

15. தமிழ்ச் சமூகம் மழையை எவ்வாறு கொண்டாடியது?
16. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாடத் தமிழின் துணைவேண்டும் என்கிறார்?
17. இடையீடு எவற்றைக் குறியீடாகக் குறிப்பிடுகிறது?
18. தமிழர் வளர்த்த அழகுக் கலைகள் நூல் பற்றிக் குறிப்பு வரைக.

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடைதருக.** **2 x 2 = 4**

19. முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.
20. செவியறிவுறூஉ துறையை விளக்குக.
21. எண் வகை மெய்ப்பாடுகள் யாவை?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7 x 2 = 14**

22. தலை, தழை, தளை – பொருள் வேறுபாடு தருக.
23. உள்ளொன்று – புணர்ச்சி விதி தருக.
24. வல்லின மெய்களை இட்டும், நீக்கியும் எழுதுக.
    அ) பள்ளிகூடங்களில் அனைத்து துறை கல்வியையும் தாய்மொழியில் பெறல் வேண்டும்.
    ஆ) குகன் இராமனைக் காணத்தேனும் மீனும் கொண்டுச் சென்றான்.
25. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.
    அ) பனை இலையாலும், மூங்கில் ஓலையாலும் கூரை போட்டான்
    ஆ) பனந்தோப்பில் நாய் அலற ஆந்தை குரைத்தது.
26. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.
    அ) ஐதீகம் ஆ) ரிமோட்
27. ஏதேனும் ஒன்றனுக்கு பகுபதம் தருக.
    அ) பொலிந்தான் ஆ) கண்டான்
28. ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.
    அ) மாமயிலை ஆ) உழாஅது
29. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
    காலத்திற்கேற்றது போல் புதிது புதிதாக மொழி வடிவத்தை மாற்ற வேண்டும்.
30. காப்பியத்தை குறிக்கும் வேறுபெயர்கள் யாவை?

## பகுதி – III

### பகுதி – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

31. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.
32. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக.
33. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
34. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

### பகுதி – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

35. அறிவின் மேன்மை பற்றித் திருக்குறள் வழி நீவிர் கருதுவன யாவை?
36. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக தமிழ்நதி கூறுகிறார்?
37. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைபடுத்துக.

38. நீங்கள் ஆசிரியரானால் மாணாக்கரை அன்பினால் எவ்வகையில் நெறிப்படுத்துவீர்கள்.

பிரிவு – 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3 x 4 = 12**

39. இலக்கியம் நயம் பாராட்டுக. ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடும் காணீர் – பாரதியார்

40. தமிழாக்கம் தருக.
   அ) Knowledge rules the world.
   ஆ) The pen is mightier than the sword.
   இ) You must be the change you wish to see in the world.
   ஈ) Soon ripe soon rotten.

41. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
   அ) பட்டக் காலில் படும் கெட்டக் குடியே கெடும்.
   ஆ) போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.

42. நிரல் நிறை அணி (அ) ஏகதேச உருவக அணி சான்றுடன் விளக்குக.

பகுதி – **IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 6 = 18**

43. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க. **(அல்லது)**
சாலை விபத்தில்லாதத் தமிழ்நாடு – இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?

44. திரைபடத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் விளக்குக. **(அல்லது)**
நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

45. கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனித நேயப் பண்புகளை விளக்குக. **(அல்லது)**
கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.

பகுதி – **V**

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

46. அ) `வையகம் பனிப்ப` என்று தொடங்கும் பாடலை எழுதுக. **1 x 4 = 4**
   ஆ) `மிகும்` என முடியும் குறட்பாவை எழுதுக. **1 x 2 = 2**

*************